1972 ஆகஸ்ட் 24]

Thanjavur Big Temple.

Buses to Ponvilainthakalathur

* 322 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether the Government had received a letter on 17th July 1970 from the Civic Association, Ponvilainthakalathur, requesting for the introduction of a bus service through their village either to Chingleput or Pondicherry; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(இ) பல்லவா போக்குவரத்துக் கழகம், 129-சி என் வழித் தடத்தில், சென்னை-பொன்விளைந்தகளத்தூருக்கு செங்கல்பட்டு வழியாக புதிய பேருந்துப் பணியை 13—4—1972 முதல் தொடங்கியுள்ளது.

நாதசுரப் பயிற்சியாளர்கள்

* 323 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், திருவையாறு, வலிவலம் ஆகிய இடங்களில் உள்ள நாதசுரப் பள்ளிகளில் எத்தனை பேர் பயிற்சி பெறுகிறார்கள்?

(இ) அங்கு பயிலும் மாணவர்கட்கு உதவிப் பணம் வழங்கப் படுகிறதா?

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன்: (அ) திருவையாறு நாதசுரப் பள்ளியில் 23 மாணவர்களும், வலிவலம் நாதசுரப் பள்ளியில் 17 மாணவர்களும் பயிற்சி பெறுகிறார்கள்.

(இ) இல்லை.

திரு. என். கிட்டப்பா: பேரவைத் துணைத் தலைவர்களே, இந்த திருவையாறு, வலிவலம் ஆகிய இடங்களிலுள்ள நாதசுரப் பள்ளிகளிலே பயிற்சி பெறுகின்ற மாணவர்களுக்கு அரசு உதவித் தொகை ஏதேனும் வழங்குகிறதா? இந்தப் பள்ளிகளிலே பயிற்சி முடிந்ததும் அந்த மாணவர்களுக்கு நற்சான்றிதழ் கொடுக்கப்

படுவதுடன், பட்டங்கள் ஏதேனும் வழங்கப்படுகிறதா? அதைப் பற்றி பரிசீலித்து ஆவன செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அரசு உதவித் தொகை ஏதும் தருவதில்லை. அங்கு வந்து பயிலுகின்ற மாணவர்களுக்கு உண்ண உணவும், இருக்க இட வசதியும் இலவசமாகச் செய்து தருகிறார்கள். அங்கே நான்கு ஆண்டுக் காலம் பயிற்சிப் பெற்றதற்குப் பிறகு, நாதஸ்வரத்திலே பயிற்சி பெற்றவர்களுக்கு "நாதஸ்வர இசை மணி" என்றும், தவுலிலே பயிற்சி பெற்றவர்களுக்கு "தவுல் நாதமணி" என்றும் பட்டத்தை வழங்குகிறார்கள்.

Thanjavur Big Temple.

* 324 Q.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether it is a fact that the State Government has urged the Union Government to permit the tourists visiting Thanjavur to go up to the High Tower of the Big temple; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

இராமேஸ்வரம் கோயில்

* 325 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்

திரு. ச. சங்குமுத்துத் தேவர் : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972 சனவரியில் இராமேஸ்வரம் கோயிலில் தீ விபத்து ஏற்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதனால் ஏற்பட்ட நட்டம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) சுமார் 1½ இலட்சம் ரூபாய் என மதிப்பிடப்படுகின்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS